**செய்தி வெளியீடு எண்:358** **நாள்: 08.06.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

மாற்றுத் திறனாளிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகள் நலன்களை பேணிகாக்கும் வகையில், மாற்றுத் திறனாளிகளுக்கு உடல்ரீதியான குறைகளுக்காக மறுவாழ்வு அளிக்கும் வகையில் நவீன உதவி உபகரணங்களை வழங்கி, சமுதாயத்தில் தன்னம்பிக்கையுடன் தன்னிச்சையாக செயல்பட அரசு உதவி செய்து வருகிறது. அவ்வகையில், பார்வையற்றோர் நலனை கருத்தில் கொண்டு பார்வைக் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு ஒளிரும் மடக்கு ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், 2016–17ஆம் நிதியாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு மேலும் பயனளிக்கக் கூடிய வகையில் (Smart Cane) நவீன ஒளிரும் மடக்கு குச்சிகள் 5,000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் என அறிவிப்பினை தொடர்ந்து, அரசாணை வெளியிடப்பட்டு நவீன ஒளிரும் மடக்கு குச்சிகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொது இடங்களில் நடக்கும் போது நான்கு அல்லது ஐந்தடிக்கு முன்பாக இருக்கும் தடைகளை Smart Cane–லிருந்து வரும் அதிர்வுகளின் அடிப்படையில் முன்கூட்டியே உணர்ந்து சுலபமாக செயல்பட ஏதுவாக இந்த நவீன ஒளிரும் மடக்கு குச்சிகள் பயன்படுகின்றன.

தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு உயர்தொழில்நுட்பம் கூடிய ஒளிரும் மடக்கு குச்சிகளை 5000–லிருந்து 10,000 ஆக உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

அதன்படி, 2017–18ஆம் நிதியாண்டில் 10,000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு உயர்தொழில்நுட்ப ஊன்றுகோல் வழங்கிட 3 கோடியே 62 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அதற்கான அரசாணையும் வெளியிட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 8.6.2017**